

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.11.2025) தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித் துறை சார்பில் அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் 190 உதவிப் பேராசிரியர்கள், 12 உதவி நூலகர்கள் மற்றும் 11 உதவி இயக்குநர் (உடற் கல்வி) பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை செயலாளர் பொ. சங்கர், கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (20.11.2025) தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித் துறை சார்பில், தமிழ்நாட்டில் உள்ள 44 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளைத் திறன்மிகு மையங்களாக (Centre of Excellence) மேம்படுத்திடும் வகையில் டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்திற்கும், தமிழ்நாடு அரசின் தொழில்நுட்ப கல்வி ஆணையரகத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை செயலாளர் பொ. சங்கர், கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## உச்சநீதிமன்றம் திட்டவட்டம்!... முதல் பக்கத் தொடர்ச்சி!

மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும், குடியரசுத் தலைவருக்கு அனுப்பலாம் அல்லது சட்டப்பேரவைக்கு திருப்பி அனுப்பலாம். இந்த மூன்றில் ஒன்றைதான் ஆளுநர் தேர்ந்தெடுக்க முடியுமே தவிர, ஒன்றிய அரசு கூறுவதுபோல் நான்காவதாக எந்த வாய்ப்பும் இல்லை என்று தெளிவாக விளக்கமளித்துள்ளது.

அரசியல் சாசனப்பிரிவு 200, 201ன் படி மசோதாக்களுக்கு ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்க வேண்டும். இல்லையெனில் சட்டப்பேரவைக்கு மசோதாவை ஆளுநர் திருப்பி அனுப்ப வேண்டும் என குறிப்பிட்டுள்ளது.

மசோதாக்கள் மீது முடிவெடுக்காமல் காலவரம்பின்றி கிடப்பில் வைக்க ஆளுநருக்கு அதிகாரம் கிடையாது என்று கூறியுள்ள உச்சநீதிமன்றம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கே அதிகாரம் இருப்பதாக திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. ஒரு மாநிலத்தில் இரண்டு அதிகார மையங்கள் இருக்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளது.

**அமைச்சரவையின் ஆலோசனைப்படியே ஆளுநர் செயல்பட வேண்டும்!**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசும், அதன் அமைச்சரவையுமே முதன்மையான இடத்தில் இருப்பதாகவும், மசோதாக்கள் விவகாரத்தில் இடையூறு விளைவிக்கும் அணுகுமுறையை ஆளுநர்கள் மேற்கொள்ளக்கூடாது என்பதுடன், ஆளுநர் செயல்படாமல் இருந்தால் அரசியல் அமைப்பு, நீதிமன்றங்கள் அதனை ஆய்வு செய்யும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

அமைச்சரவையின் ஆலோசனையின்படியே ஆளுநர் செயல்பட வேண்டும் என்று குறிப்பிட்டதுடன், தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் ஏற்கனவே அளித்த தீர்ப்பில் உறுதியாக இருப்பதாக கூறி, குடியரசுத் தலைவரின் கேள்விகளுக்கு விளக்கம் அளிக்காமல் உச்சநீதிமன்றம் திருப்பி அனுப்பியது.

### மெட்ரோ ரயில் திட்டம்: மதுரை, கோவைக்கு ஒன்றிய அரசு அனுமதி மறுப்பு!

## பாராமுகம் காட்டினால் தேர்தலில் பாடம் புகட்ட தமிழக மக்கள் தயார்!

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கம்!

சென்னை, நவ. 21–

ஒன்றிய அரசு மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அனுமதி மறுத்துள்ளது. பாராமுகம் காட்டினால் தேர்தலில் பாடம் புகட்ட தமிழக மக்கள் தயாராகி வருகின்றனர் என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

அது வருமாறு–



தினகரன்

நவம்பர் 20, 2025 வியாழக்கிழமை

ஏனிந்த பாராமுகம்?

மதுரை, கோவைக்கு மெட்ரோ ரயில் திட்டத்திற்கான அனுமதியை 20 லட்சத்துக்கும் குறைவான மக்கள் தொகை உள்ளிட்ட ஒப்பேறாத காரணங்களை கூறி மெட்ரோ ரயிலுக்கான திட்ட அறிக்கையை திருப்பி அனுப்பியுள்ளது ஒன்றிய அரசு. அப்படியென்றால் 2011ம் ஆண்டில் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்துவதற்கான சிறந்த இரண்டாம் நிலை நகரங்களில் ஒன்றாக கோவையை தேர்ந்தெடுத்தது ஏன் என பல கேள்விகள் எழுகின்றன.

ஏற்கனவே, 2015ம் ஆண்டு அப்போதைய பாஜ அரசின் ஒன்றிய நிதியமைச்சர் அருண் ஜெட்லியால், பட்ஜெட் தாக்கலின்போது தமிழகத்தில் எய்ம்ஸ் அமைக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. அப்போது அறிவிக்கப்பட்ட பெரும்பாலான நகரங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை பயன்பாட்டுக்கே வந்து விட்டது. 2019ம் ஆண்டு, ஜனவரி 27ம் தேதி,

மதுரை, கோவைக்கு மெட்ரோ ரயில் திட்டத்திற்கான அனுமதியை 20 லட்சத்துக்கும் குறைவான மக்கள் தொகை உள்ளிட்ட ஒப்பேறாத காரணங்களை கூறி மெட்ரோ ரயிலுக்கான திட்ட அறிக்கையை திருப்பி அனுப்பியுள்ளது ஒன்றிய அரசு. அப்படியென்றால் 2011ம் ஆண்டில் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்துவதற்கான சிறந்த இரண்டாம் நிலை நகரங்களில் ஒன்றாக கோவையை தேர்ந்தெடுத்தது ஏன் என பல கேள்விகள் எழுகின்றன.

ஏற்கனவே, 2015ம் ஆண்டு அப்போதைய பா.ஜ. அரசின் ஒன்றிய நிதியமைச்சர் அருண் ஜெட்லியால், பட்ஜெட் தாக்கலின்போது தமிழகத்தில் எய்ம்ஸ் அமைக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. அப்போது அறிவிக்கப்பட்ட பெரும்பாலான நகரங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை பயன்பாட்டுக்கே வந்து விட்டது. 2019ம் ஆண்டு, ஜனவரி 27ம் தேதி, நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக மதுரையில் எய்ம்ஸ் கட்டுமானத்துக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். இப்போது வரை அவர்தான் பிரதமராக உள்ளார். ஆனால், எய்ம்ஸ் கட்டுமானத்தின் முதல்கட்டப்பணிகளே 2026 ஜனவரியில் தான் முடிவடைய உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட எய்ம்ஸ் மருத்துவமனையை பார்க்காமலே, அங்கிருந்து ஒரு பேட்ச் மாணவர்கள் வெளியேறும் சூழல்தான் தற்போது உள்ளது.

இதேபோல தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்கு மாநில அரசு கேட்ட நிவாரண நிதியை தராமல் இழுத்தடித்தது, யானைப்பசிக்கு சோளப்பொரி போல ஒரு சதவீதத்துக்கும் குறைவான நிவாரண நிதியை வேண்டாவெறுப்பாய் வழங்கியது என, தமிழக மக்களின் நலனில் துளி கூட அக்கறையில்லாத ஒரு நிலையைத்தான் ஒன்றிய அரசு எடுத்து வருகிறது.

வளர்ச்சிப்பணிகளில் மட்டு மல்ல... கலாச்சாரம், பாரம்பரியத்திலும் தமிழகம் முன்னோடி என நிரூபணம் ஆகி விடக்கூடாது என்பதற்காக கீழடியில் அவர்கள் நடத்திய அரசியல் மிக மோசமானது. கீழடியில் சுமார் 2,600 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்களின் நாகரிகம் வெளிப்பட்டது. இதனை வெளிக்கொணர்ந்த தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணாவை வேறு மாநிலத்திற்கு அதிரடியாக மாற்றியது ஒன்றிய அரசு. முதல் 2 அகழாய்வு முடிவுகளை வெளியிடாமல் திருத்தம் கோரி திருப்பி அனுப்பியுள்ளது. தமிழகத்தில் அடுத்தாண்டு சட்டமன்ற தேர்தல் வர உள்ள நிலையில், எஸ்ஐஆர் பணிகளில் மறைமுகமாக மூக்கை நுழைத்து தீவிரம் காட்டி வருகிறது. இதனால் லட்சக்கணக்கான வாக்காளர்கள் நீக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக அரசியல் கட்சிகள், விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

மெட்ரோ ரயில் திட்டத்தை பொறுத்தவரை, கோவையில் 5 வழித்தடங்களில் முதற்கட்டமாக இரண்டு வழித்தடங்களில் ரூ.10,740 கோடியில் மெட்ரோ ரயில் திட்டம், மதுரையில் ரூ.11,360 கோடியில் ஒத்தக்கடை முதல் திருமங்கலம் வரை ஒரே வழித்தடத்தில் மெட்ரோ ரயில் தடத்திற்கு 936 பக்கங்களில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், 20 லட்சம் மக்கள் தொகை இல்லை என சாக்குப்போக்கு சொல்லி தட்டிகழிக்கிறது ஒன்றிய அரசு.

பா.ஜ. ஆளும் மாநிலங்களில், சின்ன நகரங்களில் கூட செயல்படுத்தப்பட்ட மெட்ரோ ரயில் திட்டத்தை, மதுரை, கோவைக்கு கொண்டு வரவே கூடாது என்ற ரீதியில் ஒன்றிய அரசு செயல்படுவதாகவும், எய்ம்ஸை போலவே மெட்ரோ ரயில் திட்டத்தையும் விரைந்து செயல்படுத்த நடவடிக்கை கோரி அமைதி வழியில் போராட உள்ளதாகவும் தமிழக மக்கள் கூறி வருகின்றனர். வழக்கம் போல பாராமுகம் காட்டினால், தேர்தலில் பாடம் புகட்டவும் தயாராகி வருகின்றனர்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டம் மறுப்பு:

## தமிழ்நாட்டு மக்களுக்கு மோடி அரசின் அநீதியாகும்!

### விவசாயிகள்-தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, நவ. 21-

விவசாயிகள் - தொழிலாளர் கட்சித் தலைவர் பொன்.குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசு அனுமதி மறுத்திருப்பது தமிழகத்திற்கு இழைத்த மாபெரும் அநீதியாகும். ஒன்றிய மோடி அரசு தொடர்ந்து தமிழகத்தையும் தமிழ்நாட்டு மக்களையும் புறக்கணித்து அவமதித்து வருகிறது. இது வன்மையான கண்டனத்திற்குரியதாகும்.

11 ஆயிரத்து 360 கோடி ரூபாயில் 31.93 கிலோ மீட்டர் தூரத்திற்கு மதுரையிலும், 39 கிலோமீட்டர் தூரத்திற்கு ரூபாய் 10 ஆயிரத்து 740 கோடி ரூபாய் செலவில் கோவையிலும் மெட்ரோ ரயில் திட்ட பணிகளுக்கு தமிழ்நாடு அரசு முறைப்படி 2024 ஆம் ஆண்டு அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளது.

ஆனால் 2017 ஆம் ஆண்டு விதிப்படி அந்த மாநகரங்களில் மக்கள் தொகை 20 லட்சம் இல்லை என்ற காரணத்தை கூறி இந்த திட்டத்தை நிராகரித்து தமிழ்நாட்டு மக்களுக்கு அநீதி செய்துள்ளது மோடி அரசு.



2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் உள்ள மக்கள் தொகை கணக்கை காட்டி ஒன்றிய மோடி அரசு இதனை நிராகரித்துள்ளது. ஆனால் இன்றைக்கு மக்கள் தொகை பன்மடங்காக உயர்ந்துள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையிலேயே கணக்கெட்டால் கூட கோவை மாவட்டத்தில் 23.5 லட்சமும், மதுரை மாவட்டத்தில் 24.9 லட்சமும் மக்கள் உள்ளனர். மாநகரில் இயக்கப்படும் மெட்ரோ ரயில் மாநகர மக்கள் மட்டும் பயன்படுத்துவதில்லை. மாநகர் நோக்கி எல்லாவற்றுக்கும் வரக்கூடிய நிலையில் உள்ள அந்த மாவட்டம் சேர்ந்த மக்கள் அனைவரும் பயன்படுத்தக் கூடியது தான் இந்த போக்குவரத்து திட்டம். இந்த நிலையில் மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டத்தை ஒன்றிய அரசு மறுத்திருப்பது அப்பட்டமான அநீதி தமிழ்நாட்டுக்கு. தமிழ்நாட்டு மக்களுக்கு செய்யும் மாபெரும் துரோகமாகும்.

உத்திரபிரதேச மாநிலம் கான்பூர் மற்றும் ஆக்ரா, மகாராஷ்டிராவில் நாக்பூர், பீகாரில் பாட்னா மற்றும் போபால் போன்ற நகரங்களுக்கு ஒன்றிய அரசு மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அனுமதி வழங்கி உள்ளது. அங்கே மக்கள் தொகை எவ்வளவு 20 லட்சத்திற்கும் குறைவாக உள்ள அந்த மாநகரங்களுக்கு எப்படி ஒன்றிய அரசு அனுமதி வழங்கியது? மோடி அரசு. எதிர்க்கட்சிகள் ஆகும். மாநிலங்களுக்கு சுண்ணாம்பையும் பாஜக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஆகும். மாநிலங்களுக்கு வெண்ணையையும் தடவுவது மோடியின் வாடிக்கையாக உள்ளது. இது அரசியல் அநாகரீகம். கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது. ஜனநாயகத்தை காலில் போட்டு மிதிக்கும் செயலாகும். இப்படி எதைப் பற்றியும் கவலைப்படாத ஒரு காட்டாட்சி மத்தியில் இருப்பதால்தான் தமிழ்நாடு வஞ்சிக்கப்படுகிறது.

கல்வி போன்ற திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு, பேரிடர் காலங்களுக்கான நிதி ஒதுக்கீடு, புதிய திட்டங்களுக்கு அனுமதி மறுப்பு, தமிழர்களின் கலாச்சார பண்பாட்டை நாகரிகத்தை வெளிப்படுத்தும் கீழடி அகழ்வாய்வு முடிவுகளை வெளிக்கொணர மறுப்பு, தமிழ்நாடு அரசின் மசோதாக்களுக்கு அனுமதி மறுப்பு இப்படி மோடி அரசின் தமிழக துரோகத்தில் மெட்ரோ ரயில் திட்ட மறுப்பும் இப்போது இடம் பிடித்துள்ளது.

தமிழ்நாட்டு மக்கள் ஒன்றிய பாஜக மோடி அரசின் தமிழக தமிழ் மக்கள் துரோகத்தை நினைவில் கொள்ள வேண்டும். தேர்தல் நேரத்தில் அவர்களுக்கு தக்க பாடத்தை புகட்ட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### சென்னை தென் மேற்கு மாவட்ட கழக

## பகுதிச்செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ அறிவிப்பு!

சென்னை, நவ. 21-

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக பகுதி செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (21.11.2025 - வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணியளவில் சி.பி.ராமசாமி சாலையில் உள்ள அலுவலகத்தில் அவைத்தலைவர் ஆ.சந்திரசேகர் தலைமையில்



நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் பகுதி செயலாளர்கள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்

பொருள்: துணை முதல்வர் பிறந்தநாள் மற்றும் கழக பணிகள்

இவ்வாறு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் வார்டு எண்.77, புளியந்தோப்பு, சிவராவ் சாலையில் ரூ.18.50 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்குக் கூடம் கட்டும் திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இதில் மா.காந்தி, கமலக்கண்ணன், டி.விஸ்வநாதன், வெ.மருதன், ஆர்.ஆரோக்கியம், ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாரன் பு.சதிஷ்குமார், ச.சூர்யா, மு.உதயநிதி ஏ.வேலன், ஆ.சூர்யா, ஜெ.ஜெய்குமார்; கோமகன், ஆதி அசோக்குமார், சுப்புராயன்; கவிதா, கி.புஷ்பராஜ் மற்றும்பலர் கலந்து கொண்டனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கத்திவாக்கம் மிசா இ.வீரராகவன்

### நவம்பர் 21 (2010)



கத்திவாக்கம் பகுதியில் 1959ஆம் ஆண்டு கழகக் கிளையைத் துவக்கி, முதல் கிளைச் செயலாளர் என்ற பெருமையும் பின்னர் நகரக் கழகச் செயலாளராக 35 ஆண்டு காலம் தொடர்ந்து கழகப் பணியாற்றியவர். தொடர்ந்து பொதுக்குழு உறுப்பினராகவும், கத்திவாக்கம் நகராட்சியின் முதல் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசமும் மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு 27 முறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.


### கோவை வடக்கு மாவட்டம்

## மேட்டுப்பாளையம் வடக்கு, காரமடை ஆகிய நகரங்கள் - கோவைப்புதூர் பகுதி மற்றும் ஆலந்துறை பேரூர்க் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

**கோவை வடக்கு மாவட்டம், மேட்டுப்பாளையம் வடக்கு நகரச்** செயலாளர் மு.முகமதுயூனுஸ் அவர்களுக்குப் பதிலாக திரு. **அ. அசரப் அலி** (4, உப்பு கிணைத்துப்பேட்டை, காவல்நிலையம் பின்புறம், மேட்டுப்பாளையம், கோவை - 641 301) அவர்கள் **மேட்டுப்பாளையம் வடக்கு நகரக் கழகப் பொறுப்பாளராகவும்;**

**காரமடை நகரச்** செயலாளர் ஆர்.வெங்கடேஷ் அவர்களுக்குப் பதிலாக திரு.**கே.ஜி.குருபிரசாத்** (15-எல், சிவன்புறம் காலனி, வேளாங்கண்ணி சர்ச் எதிரில், காரமடை, கோவை - 641 301) அவர்கள் **காரமடை நகரக் கழகப் பொறுப்பாளராகவும்;**

**கோவைப்புதூர் பகுதிப்** பொறுப்பாளர் மு.ராஜேந்திரன் அவர்களுக்குப் பதிலாக திரு.மூ.முரளி, (21-சி, அலமுநகர், கோவைப்புதூர், கோவை - 641 042.) அவர்கள் **கோவைப் புதூர் பகுதிக் கழகப் பொறுப்பாளராகவும்;**

**தொண்டாமுத்தூர் வடக்கு ஒன்றியம், ஆலந்துறை பேரூர்ச்** செயலாளர் எ.கே.ரங்கசாமி அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திரு. **என்.எம்.ராமமூர்த்தி**, (6/57, தண்ணீர் பந்தல் தோட்டம், நாதேகவுண்டன்புதூர் அஞ்சல், வலையங்குட்டை, ஆலந்துறை (வழி), கோவை - 641 101.) அவர்கள் **ஆலந்துறை பேரூர்க் கழகப் பொறுப்பாளராகவும்** நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 20.11.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்குப் பகுதி 89 வது வட்டக் கழகத்தின் BLA 2 பாக நிலை முகவர்கள்( எஸ். ஐ.ஆர். சிறப்பு தீவிர திருத்த வாக்காளர் பட்டியல் கணக்கீட்டு படிவம் குறித்து) வட்டக் கழகச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம்.இ.சேகர் தலைமையில், BLA 2 பாக நிலை பொறுப்பாளர்கள் எம். இ. எஸ் சந்தீப், கே. பிரபு ஆகியோரின் முன்னிலையில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் BLA 2 பாக நிலை முகவர்கள், கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.